செ.வெ.எண் : 23 நாள் : 12-05-2017

# பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்டாப் செலக்சன் கமிஷன் தேர்வாணையத்தால் Recruitment to the post of Multi Tasking (Non-Technical) Staff in Different States and Union Territories 2016 –14.05.2017 மற்றும் 28.05.2017 அன்று முற்பகல் மற்றும் பிற்பகல் இருவேளைகளிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி நகரப்பகுதிகளில் 14.05.2017 அன்று 08 கல்வி நிலையங்களிலும் 28.05.2017 அன்று 07 கல்வி நிலையங்களிலும நடைபெற உள்ளது. இது தொடர்பாக, இணை செயலாளர் / மண்டல இயக்குனர், ஸ்டாப் செலக்ஷன் கமிஷன் அவர்கள் தேர்வு நடத்துவது தொடர்பாக சில கூடுதல் அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள். அவர்கள் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி இன்று (11.05.2017) காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் தேர்வுகள் தொடர்பான கூட்டம் மாவட்ட ஆடசித்தலைவர் அலுவலக சிறு கூட்ட அரங்கில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்கு துணை ஆட்சியர்கள், காவல் ஆணையாளர், தேர்வு கண்காணிப்பாளர்கள், தேர்வு முதன்மை கண்காணிப்பாளர்கள் மற்றும் சார்நிலை கருவூல அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தேர்வினை சிறப்பாகவும், கவனமாகவும், குறைகள் இல்லாத நேர்வில் நடத்துவது குறித்து தக்க அறிவுரைகள் மேற்படி அலுவலர்களுக்கு வழங்கினார். மேற்படி தேர்வினை நல்ல முறையில் சிறப்பாக நடத்தி தரும்படியும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி